# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 14 வெள்ளிக்கிழமை 30.08.2024 கதிர் 347







# உறவுகள் யாழ்ப்பாணத்தில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி







சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தினமான இன்று யாழ்ப்பாணத்தில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பேரணி முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆரிய குளம் சந்தியில் காலை 11 மணியளவில் ஆரம்பமான பேரணி பருத்தித்துறை வீதி – ஆஸ்பத்திரி வீதி – காங்கேசன்துறை வீதி ஊடாக முனியப்பர் கோவிலடியை அடைந்தது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி பேரணி இடம்பெற்றது.

பேரணியில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கொழும்பு வந்த அஜித் தோவல் ரணில், அநுரவைச் சந்தித்தார்

## அரசியல், பொருளாதார விடயங்கள் ஆராய்வு

இந்தியாவின்தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் அதிகாரப்பூர்வ பயணமாக நேற்று வியாழக்கிழமை இலங்கை வந்திருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்தனவை சந்தித்து இலங்கையின் சமகால பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

2➤



# 9 மாகாணங்களிலும் களத்தில் இறங்கிய ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு குழு!



ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பணியகம் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒன்பது மாகாணங்களிலும் 26 கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தியுள்ளது.

அவர்கள் ஒவ்வொரு மாகாணத்திற்கும் சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என தலைமை கண்காணிப்பாளரும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினருமான நாச்சோ சான்செஸ் அமோர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கண்காணிப்பாளர்கள் தங்கள் கண்களாகவும் காதுகளாகவும் இருக்கப் போகிறார்கள் என்றும் அவர்கள் தேர்தல் செயன்முறையின் ஒவ்வொரு அம்சத்தையும

2➤

# தேர்தல் கடமைகளுக்கு 54 ஆயிரம் பொலிஸார்

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக 54,000 பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாக்கெடுப்பு நிலையங்கள், வாக்கு எண்ணும் நிலையங்களை நிர்வகித்தல், வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்படுவதைக் கண்காணித்தல், ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அவற்றைத் தீர்ப்பது, அசம்பாவிதங்கள் இன்றி தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்தல் போன்ற பணிகளுக்காக நாடு முழுவதும் காவல்துறையினர் கடமையில் ஈடுப்படுத்தப்படவுள்ளார்கள்.

நாடு முழுவதிலும் உள்ள 13,000 வாக்கெடுப்பு நிலையங்களிலும், 45 வாக்கு எண்ணும் நிலையங்களிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தெரிவித்துள்ளார்.

மேலும், தேர்தல் காலத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் காவல்துறையினர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுப்பட 3,200 வாகனங்கள் பயன்படுத்தபடவுள்ளன.

தேர்தல்கள் சட்ட மீறல்களை தடுக்க காவல்துறையினர்தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

2➤

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த பதாகைகள் மற்றும் கட்அவுட்களை நீக்குவதற்காக 1,500 தொழிலாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 1,69,358 சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் கட்அவுட்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும், 61,062 சுவரொட்டிகள், 512 பதாகைகள் மற்றும் 793 கட்அவுட்கள் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 9 மாகாணங்களிலும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உன்னிப்பாக அவதானிப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். இலங்கை ஜனாதிபதித் தேர்தலின் சட்ட நடைமுறை, நிதி, ஊடகம் மற்றும் சமூக ஊடகங்கள், பாதுகாப்பு மற்றும் நடமாட்டம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய 10 நிபுணர்களைக் கொண்ட முக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்கள், தேர்தல் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகத்தை நகரங்களில் மட்டுமல்லாது, சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களிலும் கண்காணிப்பாளர்கள் சந்திப்பார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் தரப்புகளை சந்தித்திருந்த அஜித் தோவல் தமிழ் மக்கள் நன்றாக ஆலோசித்து தமது தீர்மானத்தை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எடுக்க வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுனான சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டிருந்தார். இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்கவையும் அஜித் தோவல் சந்தித்துள்ளார். முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சந்திப்பாக இது பார்க்கப்படுகிறது. இன்னும் 22 நாட்களில் இலங்கை ஜனாதிபதித் தேர்தலொன்றை எதிர்கொள்ள உள்ள நிலையில் டில்லியின் செய்திகளுடன் இலங்கை வந்துள்ள அஜித் தோவல், அரச தரப்பினரை மாத்திரமே சந்திப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் தமிழ் தரப்பினர் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வாய்ப்பு உள்ள வேட்பாளர்களில் ஒருவராக கருதப்படும் அனுரகுமாரவையும் சந்தித்துள்ளமை குறித்து

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் புதுடில்லிக்கு அழைக்கப்பட்ட அனுரகுமாரவிடம் இந்தியா எதிர்கால அரசியல் நகர்வுகள் குறித்து கலந்துரையாடியிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள சூழலில் வெற்றி வேட்பாளர்களில் ஒருவராக கருதப்படும் அனுரவை இந்திய தரப்பு சந்தித்தன் ஊடாக எவர் வெற்றிபெற்றாலும் இணைந்து செயல்பட தயார் என்ற மறைமுக செய்தியையே சர்வதேசத்துக்கு இந்தியா வெளிப்படுத்தியுள்ளதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்

# வவுனியாவிலும் உறவுகள் ஆர்ப்பாட்டம்

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று வெள்ளிக்கிழமை தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டம் வவுனியா தபால் திணைக்களத்தின் அருகில் 2,750வது நாளாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் சுழற்சி முறை போராட்டத்தில் ஈடுபடும் கொட்டகைக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன் போது எங்கே எங்கே உறவுகள் எங்கே கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே என்று கோஷங்களை எழுப்பியிருந்ததுடன், ஐரோப்பிய ஒன்றிய மற்றும் அமெரிக்க கொடிகளை தாங்கியவாறும், காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளின் படங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.




# மன்னார் சட்டத்தரணிகள் தொடர் பணிப்பகிஷ்கரிப்பு



மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராகவும் அவருக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கொழும்பில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யக் கோரியும் இரண்டாவது நாளாகவும் இன்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக இன்று அழைக்கப்பட்ட அனைத்து வழக்கு விசாரணைகளும் பிறிதொரு தினத்துக்குத் தவணை இடப்பட்டுள்ளது.

மன்னார் மேல் நீதிமன்றத்துக்கு முன்பு இன்று மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ்பெல்டானோ தலைமையிலான சட்டத்தரணிகள் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ்பெல்டானோ ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 12 வருடங்களுக்கு முன்னர் மன்னார் மேல் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக சுமார் 52 பேர் வரை கைது செய்யப்பட்டு கடந்த 12 வருடங்களாக வழங்கு விசாரணை இடம்பெற்று நேற்று வியாழக்கிழமை குறித்த வழக்கு விசாரணை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை குறித்த வழக்கு விசாரணை தொடர்பாக கொழும்பில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியின் புகைப்படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் அவருக்கு எதிராக ஒட்டப்பட்டுள்ளன. சிங்கள மொழியில் அவருக்கு எதிராக வசனங்கள் அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்படி வழக்கு விசாரணைகள் உரிய முறையில் இடம்பெற்று வந்துள்ள போதும் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட குறித்த நடவடிக்கைக்கு எதிராக நேற்று வியாழக்கிழமையும், இன்று வெள்ளிக்கிழமையும் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளோம். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாங்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளோம். எனவே, உரிய அதிகாரிகள் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றார்.

## திருமலை ஆர்ப்பாட்டத்தில் கைதான ரஜீவ் விடுதலை

திருகோணாமலையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அரகலய செயற்பாட்டாளர் ரஜீவ்காந் ராஜ்குமார் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் தலையீட்டால் விடுதலை செய்யப்பட்டார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தபால் மூலமான வாக்களிப்பு செப்ரெம்பர் 4 இல் ஆரம்பம்

## தேல்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்




ஜனாதிபதித் தேர்தலில் தபால் வாக்குகளைப் பதிவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

செப்டெம்பர் 4ஆம் திகதி மாவட்டச் செயலகங்கள் மற்றும்தேர்தல் ஆணைக்குழு அலுவலகங்களில் தபால் வாக்குகளைப் பதிவு செய்ய முடியும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும்செப்டெம்பர்மாதம் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் முப்படை முகாம்கள் மற்றும் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களிலும் தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இதற்கிடையில், தபால் வாக்குகளை உரிய நாட்களில் பதிவு செய்ய முடியாத தபால் வாக்காளர்கள், செப்டெம்பர் 11 மற்றும் 12 ஆகிய இருதினங்களில், தங்கள்பணியிடம்அமைந்துள்ள மாவட்ட தேர்தல்அலுவலகங்களில், வாக்குகளை பதிவுசெய்யலாம்எனவும்தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்களிப்பதற்கு அடையாளச் சான்று, தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி உரிமம், செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை என்பன கட்டாயமாகும்.

இருப்பினும், அதிகாரப்பூர்வ அடையாள அட்டையைப் பயன்படுத்தி யாராவது தபால் வாக்குகளைக் குறிக்க வந்தால், தபால் குறிக்கும் பணியை மேற்பார்வையிட தேர்தல் அதிகாரியால் நியமிக்கப்பட்ட அதிகாரி வாக்காளரின் அடையாளத்தை சரிபார்ப்பார் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறான நிலையில், உத்தியோகபூர்வ அடையாள அட்டையை அளிக்கும் வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டில் குறியிட வாய்ப்பளிக்கக் கூடாது என்று தேர்தல் ஆணைக்குழு சான்றிதழ் வழங்கும் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளது.






## வெதுப்பகத்திற்கு சீல்

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த சில நாட்களாக உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களைப் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த வாரம் சுழிபுரம் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்களால் ஏற்கனவே வழங்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பான அறிவுறுத்தல்களை செய்யாத உணவுகையாளும் நிலையங்களை இனங்கண்டு பரிசோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர். இதன்போது நீண்டகாலமாக சுகாதார நடை முறைகளை பின்பற்றாத வெதுப்பகம் ஒன்று சிக்கிக்கொண்டது.

மேற்படி வெதுப்பக உரிமையாளருக்கு எதிராக சுழிபுரம் பொது சுகாதார பரிசோதகரினால் நேற்று மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குகளை விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதிமன்றம், வெதுப்பக உரிமையாளருக்கு மொத்தமாக 24,000 ஷரூபா தண்டம் விதித்ததுடன் வெதுப்பகத்தை குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டது. (01)

## ஒரு வீரனைப் போல நாட்டை பொறுப்பேற்ற

### ரணில் – மஹிந்த அமரவீர

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் நெருக்கடியான நேரத்தில் பொறுப்பேற்றார், எனவே நாங்கள் இன்று அவருக்கு ஆதரவளிக்கி றோம். அன்று மக்கள் வரிசையில் நின்று இறந்தனர். அப்போது நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஒரு வீரனைப் போல ஏற்றுக்கொண் டாரென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஹம்பாந் தோட்டை மற்றும் மொனராக லையில் இடம்பெற்ற மக்கள் சந் திப்பில் கலந்து கொண்டு தெரிவித்தார். மேலும், "ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் னர் எங்களுடைய ஆதரவையும் அவர் கேட்டுக்கொண்டார். விவசாயிகளை மீண்டும் விவசாய நிலங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியி லும் உரங்களை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்கி னோம்.

அதனைத் தடுக்க ஜே.வி.பி என்ன தடைகளை ஏற்படுத்தினா லும் மக்களுக்கு உர மானியம் வழங்குவதை நாங்கள் நிறுத்த வில்லை.

அரசின் விவசாய நவீனமய மாக்கல் திட்டத்தால், இன்று நாட்டில் அரிசி கூட உற்பத்தியாகியுள்ளது. நமது எதிர்கால அரசாங்கத்தின் கீழ், அரிசியை ஏற்றுமதி செய்வதன் மூலம் விவசாயிகளின் பொருளா தாரம் உயர்த்தப்படும். விவசாய நவீனமயமாக்கல்திட்டத்தின் மூலம், இளைஞர்கள் எதிர் காலத்தில் மூன்று முதல் நான்கு இலட்சம் பெறும் வகையில் திட் டங்கள் உருவாக்கப்படும்.

## போராட்டத்தை தடை விதிக்க கோரிய மனு தள்ளுபடி

யாழ்ப்பாணத்தில் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தினத்தை அடையாளப்படுத்தி வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு தடை விதிக்க கோரி யாழ்ப்பாண தலைமையக காவல்துறையினர் யாழ். நீதவான் நீதிமன்றில் விடுத்த வேண்டுகோளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நிராகரித்துள்ளது.

இந்த தடையுத்தரவு விண்ணப்பத்திற்கான வழக்கு விசாரணை நேற்று வியாழக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற வேளையிலேயே நீதிமன்றம் காவல்துறையினர் செய்த விண்ணப்பத்தினை நிராகரித்துள்ளது.

# திருமலையிலும் உறவுகள் போராட்டம்





திருகோணமலையுல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் மூலமாக போராட்டம் ஒன்றை இன்று முன்னெடுத்தனர்.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த உறவுகள் இதில் கலந்து கொண்டனர். பன்னாட்டு சமூகத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தி குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினத்தை முன்னிட்டு குறித்த போராட்டமானது திருகோணமலை கடற்கரைக்கு முன்னாள் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஒரு ஏமாற்று நாடகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி இல்லை, சர்வதேச நீதி மற்றும் பொறுப்புக் கூறலை நாங்கள் கோருகிறோம் உள்ளிட்ட வாசகங்களை ஏந்தி ஈகை சுடறினை ஏற்றியும் அழு குரல்களை முன் வைத்து நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்றும் இதன் போது இடம்பெற்றது. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பல உறவுகள் இதில் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டப் பேரணி





சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியிலும் இன்று காலை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கந்சாமி கோவில் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மீனாச்சி அம்மன் ஆலயம் வரை சென்று அங்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நினைவாக சிதறு தேங்ககாய் உடைக்கப்பட்ட்டது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த உறவுகள், சர்வதேசமே எமக்கு உரிய தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

இதன் போது அரசியல் பிரமுகர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மதகுருமார்கள் என பலரும் கலந்து கொண்டு உணவுபூர்வ தமது ஆதரவை வழங்கியிருந்தனர். (113)

# அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுடன் சஜித் ஆலையடிவேம்பில் சந்திப்பு



(வி.ரி. சகாதேவராஜா)


ஜனாதிபதி வேட்பாளர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசா அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை ஆலையடிவேம்பில் சந்தித்தார். ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் மாவட்ட ஒட்டுமொத்த தமிழ் மக்களை ஓரிடத்தில் சந்தித்தது இதுவே முதல் முறையாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்தின் அழைப்பின் பேரில் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர்சஜித் பிரேமதாச அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை சந்திப்பதற்காக ஆலயடிவேம்பு பிரதேசத்துக்கு வருகை தந்திருந்தார். இதில் திருக்கோவில் கோமாரி ஆலையடிவேம்பு வளத்தாப்பட்டி காரைதீவு கல்முனை போன்ற பிரதேசங்களை சேர்ந்த பெருந்திரளான தமிழ் மக்கள் கலந்து கொண்டு சஜித் பிரேமதாசவுக்கு சிறந்த தமிழ் கலாச்சார அடிப்படையிலான பரிவட்டம் கட்டிஆரத்தி எடுத்து வரவேற்பினை வழங்கி இருந்தார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் ஆங்காங்கே அதிக மக்கள் வெள்ளம் திரண்டு அவரை சம்மாந்துறை பொத்துவில் அட்டாளச்சேனை போன்ற பகுதிகளில் வரவேற்று நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தொகுதி அமைப்பாளர் வினோகாந்த் கருத்து தெரிவிக்கையில், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களாகிய திருக்கோவில் ஆலையடிவேம்பு கோமாரி போன்ற பகுதிகளில் அதிக விளைச்சல் காணிகள் நீரின்றி வேளாண்மை செய்யப்படாமல் காணப்படுவது. அதிக தொகையான இளைஞர்கள் தொழில் வாய்ப்பின்றி அதிகாலையில் வீதிகளில் கூலித்தொழிலுக்காக அங்கலாய்க்கிறார்கள். பெண்கள் தொழில் இன்றி தனியார் கடைகளில் தனியார் நிறுவனங்களில் பணி புரிவது போன்ற விடயங்கள் இருக்கின்றன. இவற்றுக்கு தீர்வுகளை பெற்று தருவதானால் விளைச்சல் பூமிகளுக்கான நீர் வசதிகள் இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பு தொழில் பேட்டைகள் தொழிற்சாலைகள் சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தல் போன்ற விடயங்களை எதிர்காலத்தில் செய்வதோடு திருக்கோவில் பகுதியில் காணப்படக்கூடிய சட்டவிரோத இல்மனைட் அகழும் செயற்பாடுகளையும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மலரும் ஆட்சியில் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளையும் முன் வைத்திருந்தார்.

# அளுத்தகமவிலும் சரத் ஏமாற்றம்!



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 'பீல்ட் மார்ஷல்' சரத் பொன்சேகா, நேற்று வியாழக்கிழமையன்று பிற்பகல் அளுத்கம பஸ் நிலையத்தில் பொதுக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தார் .

இதில், சரத் பொன்சேகா உரையாற்றிக் கொண்டிருந்தபோது, தேரர் ஒருவர் உட்பட சில பேச்சாளர்கள் மாத்திரமே மேடையில் இருந்ததாகவும், பொது மக்கள் எவருமே இதில் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக அவர் ஏற்பாடு செய்யும் கூட்டங்களுக்கு பொதுமக்கள் கலந்துகொள்ளாமையால்அவர்கடும்விரக்தியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தேர்தல் களத்தில் 39 வேட்பாளர்கள் இருந்தாலும் இரண்டு கொள்கைகள் மட்டும்தான் இருக்கின்றன

## யாழ்ப்பாணத்தில் மக்கள் போராட்ட முன்னணி தெரிவிப்பு

"ஜனாதிபதி தேர்தல் களத்தில் 39 வேட்பாளர்கள் இருந்தாலும் இங்கு இரண்டே இரண்டு கொள்கைகள்மட்டும் தான் இருக்கின்றது" என்று மக்கள் போராட்ட முன்னணியாழ்ப்பாணம்ஊடக மையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.



மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போபகேக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சி.கா.செந்திவேல் உட்பட கட்சியின் முன்னணி உறப்பினர்கள் பலரும் பலந்துகொண்டனர்.

இந்த ஊடகவியலானர் சந்திப்பில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

'எந்த ஒரு வேட்பாளரும் சரியான கொள்கையுடனும் கோட்பாட்டுடனும் இந்த அரசியல் களத்தில் இல்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். இந்த வறுமையை நாங்கள் நிரப்ப வேண்டிய தேவையை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். எனவே தான் எங்களுடைய மக்களின் கொள்கை என்ற இந்த கொள்கை பிரகடனத்தின் ஊடாக வர்க்க பிரச்சனைகளில் இருந்து இனப் பிரச்சினை வரைக்கும் சரியான தீர்வுகள் உடைய மரணப் பிடியிலிருந்து நாங்கள் எப்படி வெளிவருவது தொடர்பான விடயங்களையும் மிகத் தெளிவாக இது குறிப்பிட்டு இருக்கின்றோம்.

குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களை பொருத்தவரையில் மிக நீண்ட காலமாக நாங்கள் ஒரு பாரிய சிக்கலுக்குள் இருக்கின்றோம். இனப்பிரச்சினை எங்களை கொன்று குவித்து இருக்கின்றது மக்கள் இனப் பிரச்சினையினால் இழந்தவை கொஞ்ச நஞ்சம் அல்ல. இப்படியே இந்த இனப்பிரச்சினைக்கு தீர்வுற்ற நிலையிலேயே இந்த விடயம் செல்ல முடியாது.

எனவேதான் ஏற்கனவே தோழர்கள் குறிப்பிட்டது போன்று நாங்கள் சுயாட்சி என்ற தீர்வு திட்டத்தை முன் வைத்திருக்கின்றோம். முன்னுரிமை நீக்குவதாக குறிப்பிட்டு இருக்கின்றோம். இந்த நாடு தொடர்ந்து புரையோடிப் போய் இருக்கும் மேலாதிக்க சிந்தனையைக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், நாங்கள் தீர்க்கமான பல கொள்கைகளோடு மக்களுக்கு என்ன தேவை, அடித்தட்டு மக்களினுடைய அடிப்படை தேவைகள் என்ன, இந்த நாட்டுக்கான சரியான பாதை என்ன, என்பதை மிக ஆழமாக சிந்தித்து எங்களுடைய கொள்கையாக நாங்கள் வெளியிட்டு இருக்கின்றோம்.

குறிப்பாக 39 வேட்பாளர்கள் இருந்தாலும் இங்கு இரண்டே இரண்டு கொள்கைகள் மட்டும் தான் இருக்கின்றது என்பதை நாங்கள் இந்த தேர்தல் பிரச்சாரங்களில் அடிப்படை அம்சமாக குறிப்பிடுகின்றோம்.

எங்களுடைய கொள்கை மிகவும் தனித்துவமானது மக்களுக்கானது நாங்கள் கொள்கை பிரகடனத்தில் கூட மக்களின் கொள்கை, மக்களின் வேட்பாளர் என்று தான் பாவிக்கின்றோம் அரசியலை நாங்கள் செய்யவில்லை. எனவே எங்களுடைய சரியான கொள்கைகளை மக்களுக்கு நாங்கள் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கும் மக்கள் இந்த கொள்கைகளுக்குள் செல்ல வேண்டும். இந்த கொள்கைகளை நன்கு நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

வடகிழக்கில் தமிழ்மக்கள் எதிர்நோக்குகின்றது மிக மோசமான அடக்குமுறை. அந்த அடக்கு முறையின் வடிவங்கள் இங்கு சட்டவிரோதமாக கட்டப்படுகின்ற விகாரைகள்,எத்தனையோ ஆயிரம் ராணுவ வீரர்களை குவித்துவைத்திருக்கின்றார்கள்.

தொடர்ந்து பயங்கரவாத தடை சட்டம் இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டவருடைய போராட்டம் இருக்கின்றது. அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள். இப்படியான எந்த விடயங்களுக்கும் தீர்க்கமான ஒரு பதிலை சொல்ல முடியாத கட்சிகளும் வேட்பாளர் இருக்கின்றனர்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# மருதமுனை நூலகத்தில் “வாசிக்கும் மலர்கள்” சிறுவர் நிகழ்வு

(அஸ்லம் எஸ். மௌலானா)

மருதமுனை பொது நூலகத்தில் “வாசிக்கும் மலர்கள்” எனும் சிறுவர் சிறப்பு நிகழ்வு வியாழக்கிழமை பிற்பகல் நூலகர் ஹரீஷா சமீம் தலைமையில் நடைபெற்றது.

சிறுவர்களின் கல்வி மற்றும் அறிவை விருந்தி செய்யும் வகையில் கல்முனை மாநகர சபை நிர்வாகத்திற்குட்பட்ட நூலகங்களில் சிறுவர் பகுதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் விடுத்திருந்த அறிவுறுத்தலுக்கு அமைவாக உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் அவர்களின் ஆலோசனை, வழிகாட்டலில் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் நூலகங்களின் செயற்பாட்டினை வினைத்திறன் மிக்கதாகவும் சிறுவர்களை வாசிப்பின்பால் ஈர்ப்பதற்காகவும் சிறுவர்களை, நூலகத்தோடும் நூல்களோடும் தொடர்புபடுத்துவதற்காவும் தமது நூலகத்திற்கு வருகைதந்து வாசிக்கும் ஒரு தொகுதி சிறுவர்களை ஒன்றினைத்து இந்த சிறப்பு நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதன்போது தாம் வாசித்த கதைகள், நகைச்சுவைகள், பாடல்கள் மற்றும் அறிவுசார் தகவல்களை அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

சிறுவர்களை கவர்ந்து மகிழ்வுறச் செய்த இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்களுக்கு நூலக உத்தியோகத்தர்கள் அன்பளிப்பு பொதிகளுடன், இனிப்புகளையும் வழங்கி பாராட்டி கௌரவித்தனர். இந்த நிகழ்வுக்கு ஆயுஊஉழ எனும் நிறுவனம் அனுசரணை வழங்கியது.











# சரளா விமலராசாவின் மரபுக் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா

சுவிற்சர்லாந்து பாவலர்மணி திருமதி சரளா விமலராசா அவர்களின் மரபுக் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா இறைபணிச் செம்மல் த.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறபெற உள்ளது. இந்நிகழ்வானது சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் இந்து இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொள்வதுடன் முதல் பிரதியினையும் பெற உள்ளார்.

அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் ரீ.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் கோடீஸ்வரன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ ஜெகராசன், பிரதேச செயலாளர் உட்பட ஏனைய அதிதிகளும் கலந்து கொள்ள உள்ளனர்.

நூல்கள் அறிமுக உரை வழங்குபவர் கவிஞர் கனக சூரியம் யோகானந்தம் ஓய்வு நிலை அதிபர் திருகோணமலை மற்றும் பாட்டரசர் புகழ் கலிவிருத்தம் சாமஸ்ஸ்ரீ, ஏ எல். கிதுர் முஹம்மது வலயக் கல்வி உதவி பணிப்பாளர் ஆகியோரால் ஆய்வுரை வழங்கப்பட இருக்கின்றது.

இந்நிகழ்வின் போது பாட்டரசர் புகழ் கலிவிருத்தம், பனங்காட்டு அந்தாதி, சிந்து பாடுவோம், விருத்தமாயிரம் மரபுக் கவிதை போன்ற நூற்கள் வெளியிடப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரக்குற்றி விழுந்ததில் ஒருவர் உயிரிழப்பு

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கைர் ஜ/ம்மா பள்ளிவாசலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது மர ஆலையத்தில் நேற்று வியாழக்கிழமை கனரக வாகனத்தில் இருந்து மரக்குற்றியை இறக்கும் போது மரக்குற்றி விழுந்ததில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் மொனராகலை பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய ரசி குமார் என்பவரே உயிரிழந்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் காணப்படுகிறது. சம்பவம் தொடர்பான மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.






# கலந்துரையாடலும் உபகரணங்கள் வழங்கி வைப்பும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனைபிராந்தியசுகாதார சேவைகள்பணிமனையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடும் பொருட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகல வைத்தியசாலைகளினதும் அபிவிருத்திக் குழுக்களை சந்தித்து வருகின்றார்.

அந்தவகையில் மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக அவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்களை அண்மையில் சந்தித்து கலந்துரையாடினார்.

தற்போது வைத்தியசாலையில்முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள், தேவைகள் மற்றும் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்ட பிராந்தியப் பணிப்பாளர் அபிவிருத்திக் குழுவினால் முன்வைக்கப்பட்ட தேவைகளில் சிலவற்றை நிவர்த்திசெய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் அவ்வைத்தியசாலையில் அவசரத் தேவையாக காணப்பட்ட சக்கர நாற்காலியினையும்வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம்பிராந்திய பணிப்பாளர் இந்நிகழ்வின் போது கையளித்ததுடன் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவிற்கான தற்காலிக அனுமதியும் வழங்கி வைக்கப்பட்டது.

வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பில் அபிவிருத்திக் குழுக்களுடன் கலந்துரையாடி வரும் பணிப்பாளரின் நடவடிக்கைகளை பாராட்டிய குறித்த வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர், அவ்வைத்தியசாலையின் அவசர தேவையாகக் காணபட்ட சக்கர நாற்காலி பிரச்சினையை தீர்த்தமைக்காக பணிப்பாளருக்குநன்றியினையும் தெரிவித்தனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!